
# மாணவர் தின வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தின வழிபாடு

தொகுப்பாசிரியர்
**சைவசித்தாந்த சாகரம்**
பண்டிதர் இ. வடிவேலு அவர்கள்
திருகோணமலை

பிரசுரம்

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**
320, செட்டியார் தெரு, கொழும்பு -11.
தொலைபேசி - 334004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தமிழ் வேதமாகிய பன்னிரு திருமுறைகளின் அருமை பெருமைகளைச் சைவ உலகம் நன்கறியும். அறிந்திருக்க வேண்டியது சைவப்பெருமக்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையுமாகும். பஞ்சபுராணத்திரட்டுடன் ஓர் அம்சமாக சைவ மக்களுக்கு என்றும் வேண்டிய திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை , சிவபுராணம் என்பனவும் வெளியிடப்படுகின்றது. வாரத்தில் ஒவ்வொரு நாட்களிலும் பாடக்கூடியதாக இத்திரட்டு அமைகிறது. ஆலயங்களில் திருமுறைகளை ஓதும்போது தேவாரம், திருவிசைப்பா, திருவாசகம், திருப்பல்லாண்டு, திருப்புராணம் எனப்படும் ஐந்தையும் ஓதுவதையே பஞ்சபுராணம் என்பர். இத்துடன் திருப்புகழையும் சேர்த்துப் பாடுவது பிற்கால வழக்கமாகும். பஞ்சபுராணத்தை ஓதத் தொடங்கும் போது முதலில் மூவர் தேவாரத்தையும் ஓதுவது தான் உயர்ந்த மரபு அந்த மரபை அனுசரித்து இப்பஞ்ச புராண தொகுப்பிலும் ஒவ்வொரு நாளுக்கும் மூவர் தேவாரமும் சேர்க்கப் பட்டிருக்கின்றது. சிவனை முழுமுதற் கடவுளாக வைத்தே தேவார முதலிகள் தேவாரம் பாடியருளினார்கள்

இத்தகைய சிறப்பு அம்சங்கள் பொருந்திய பஞ்சபுராணத்தை மாணவர்கள் மாத்திரமல்ல பெரியவர்களும் தினமும் பாராயணம் செய்து எல்லா நலன்களும் பெற வேண்டுமென்பதே எமது அவாவாகும். தொகுத்தளித்த திருமலைப் பண்டிதர் இ.வடிவேலு அவர்களுக்கு எமது நன்றி.

சிவா அச்சகம்<br>
கைதடி<br>
17 - 10 - 1998.

என்றும் சிவப்பணியில்<br>
ஆறுமுகம் கந்தையா J.P<br>
பதிப்பாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிற்றுக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. திருஞானசம்பந்தர் பண் - பழம்பஞ்சுரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள்
மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது
காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே அமரர்கள் செய்வதும்
உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே பிரமபுரத்தை
உகந்தனையே

2. திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன
தென்கடம்பைத் திருக்கரக்கோயிலாள்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சுந்தரமூர்த்திநாயனார் பண் கொல்லிக்கௌவாணம்

பொன்னானை மயிலூர்தி முருகன் தாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை அமரர்கள்தம் பெருமானைக் கருமானின்
உரியானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை எறிகெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் மிகழ்வன்போல்யானே.

## திருவாசகம்

4. மாணிக்கவாசகர் கோயில் திருப்பதிகம்

இன்றெனக்கருளி இருள்கடிந்து உள்ளத்து எழுகின்ற
ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைத்தேன் நீயலாற்
பிறிதுமற்றின்மை
சென்றுசென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தென்றாந்
திருப்பெருந்துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றியொன்றில்லை யாருன்னை
அறியகிற்பாரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

5. சேந்தனார் பண் பஞ்சமம்

மாலுலா மனந்தந்து என்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளும்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்தன்
என்னுமென் மெல்லியள் இவளே.

## திருப்பல்லாண்டு

6. சேந்தனார் பண் பஞ்சமம்

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின்
குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர் ஆனந்த
வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

7. சேக்கிழார் சுவாமிகள்

உலகெலாம் உணர்ந் ஓதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

8. கச்சியப்ப சுவாமிகள்

அருவமும்உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## திருப்புகழ்

9. அருணகிரிநாதர்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

## திங்கட்கிழமை

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. திருஞானசம்பந்தர் பண் வியாழக்குறிஞ்சி

நெருப்புரு வெள்விடை மேனியர் ஏறுவர் நெற்றியின்கண்
மருப்புறு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர்மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தையார் விறல்மாதவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென் புறவத்தணி புண்ணியரே.

2. திருநாவுக்கரசர் போற்றித்திருத்தாண்டகம்

முக்கணா போற்றி முதல்வா போற்றி முருகவேள்தனைப்
பயந்தாய் போற்றி
தக்கணா போற்றிதருமா போற்றி தத்துவனே போற்றி
என்தாதாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொக்கணா வென்றிருவர் தோள்கைகூப்பத்
துளங்காதெரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தாய் போற்றி எறிகெடில
வீரட்டத் தீசாபோற்றி

3. சுந்தரமூர்த்திநாயனார் பண் - தக்கேசி

ஆத்தம் என்றெனை ஆளுகந் தானை
அமரர் நாதனைக் குமரனைப் பயந்த
வார்த் தயங்கிய முலைமட மானை
வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்தனைச் சிவனைச் செழுந்தேனைத்
தில்லை அம்பலத்துள் நிறைந்தாடும்
கூத்தனைக் குருமாமணிதன்னைக்
கோலக்காவினிற் கண்டு கொண்டேனே.

## திருவாசகம்

4. மாணிக்கவாசகர் அடைக்கலப்பத்து

செழுக்கமலத் திரளன்ன நின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர் யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக் கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய் உன்னடைக்கலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

5. பூந்துருத்திநம்பிகாடநம்பி பண் - சாளரபாணி

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னைமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளும் தானும்அணிதில்லைச்
செம்பொன் செய் அம்பலமே சேர்ந்திருக்கையாயிற்றே.

## திருப்பல்லாண்டு

6. சேந்தனார் பண் - பஞ்சமம்

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
துய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சேக்கிழார் சுவாமிகள்

தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியுந்தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொற்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

8. கச்சியப்ப சுவாமிகள்

முழுமதியன்ன ஆறுமுகங்களும் முன்னான் காகும்
விழிகளின் அருளும் அன்றி வேறுள படையின் சீறும்
அழகிய கரமீராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும
செழுமலர் அடியுங்கண்டான் அவன்தவம் செப்பற்பாற்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

9. அருணகிரிநாதர்

துள்ளு மத வேள்கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவானே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழிஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்

## செவ்வாய்க்கிழமை

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. திருஞானசம்பந்தர் பண் நட்டபாடை

அருகரொடு புத்தரவ ரறியாவன் மலையான்
மருகன் வரும் இடபக்கொடி உடையானிடம் மலரார்
கருகு குழல் மடவார் கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமை பகர் முதுகுன் றடைவோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. திருநாவுக்கரசர்

## திருக்குறுந்தொகை

முன்னையார் மயிலூர்தி முருகவேள்
தன்னை யாரெனில் தானோர் தலைமகன்
என்னை ஆளும் இறைவன் எம்பிரான்
பிள்ளை யாரவர் பேரெயி லாளரே.

3. சுந்தரமூர்த்திநாயனார் பண் தக்கேசி

மறவனை அன்று பன்றிப்பின் சென்று
மாயனை நால்வர்க்கு ஆலின்கீழ் உரைத்த
அறவனை அமரர்க்கு அரியானை
அமரர் சேனைக்கு நாயகனான
குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற
கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவிரியும் நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந் தென் நினைக்கேனே.

## திருவாசகம்

4. மாணிக்கவாசகர் திரு அம்மானை

பண்சுமந்த பாடற் பரிசு படைதருளும்
பொண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மணசுமந்து கூலிகொண்டு அக்கோலால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

5. சேந்தனார் பண் - பஞ்சமம்

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள்சூழ் கோழி வெல் கொடியோன்
காவனற் சேனையென்னக் காப்பவன் என்
பொன்னை மேகலை கவர்வானே
தேவி நற்தலைவன் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவி நற்பீலி மாமயிலூருஞ்
சுப்பிர மணியன் தானே

## திருப்பல்லாண்டு

6. சேந்தனார் பண் - பஞ்சமம்

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

## 7. சேக்கிழார்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன்
திருநடம்கும் பிடப்பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம்என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்

## 8.கச்சியப்ப சுவாமிகள

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை அறிந்திலேன்யான்
மாலயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அருணகிரிநாதர்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்முக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.
திருச்சிற்றம்பலம்

## புதன்கிழமை

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. திருஞானசம்பந்தர் பண் - வியாழக்குறிஞ்சி

தழைமயி லேறவன் தாதையோ தான்
மழைபொழி சடையவன் மன்னு காதில்
குழையது விலங்கிய கோல மார்பின்
இழையவன் இராமன தீச்சரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்

படைமலிந்த மழுவாளும் மானுந்தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையொடு கொடியுந் தோன்றும்
நான்மறையின் ஒலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும்
முரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பதத்தின் பொலிவு தோன்றும்
பொழில் திகழும் பவணத்தெம் புனிதனார்க்கே

3. சுந்தரமூர்த்திநாயனார் பண் - காந்தாரம்

நமர் பிறர் என்பதறியேன்
நான் கண்டதே கண்டு வாழ்வேன்
தமரம் பெரிதும் உகப்பான்
தக்கவாறு ஒன்றும் இலாதேன்
குமரன் திருமால் பிரமன்
கூடியதேவர் வணங்கும்
அமரன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

4. மாணிக்கவாசகர் குழைத்தபத்து

வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்ட முழுதும்
தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப்
பணிகொண்டாய்
வேண்டிநீ யாதருள் செய்தாய் யானும் அதுவே
வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உந்தன்
விருப்பன்றே.

## திருவிசைப்பா

5. சேந்தனார் பண் - பஞ்சமம்

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழிமிழலை
விண் விழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

6. சேந்தனார் பண் - பஞ்சமம்

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடைஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும்இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டுகூறுதுமே.

# திருப்புராணம்

7. சேக்கிழார் சுவாமிகள்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கச்சியப்ப சுவாமிகள்

கந்தநம ஐந்துமுகர் தந்த முருகேசநம கங்கை
மைந்த நம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலைபுனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம நற்பரமதாம்
எந்தைநம என்றுமிளையோய்நம குமாரநம என்று தொழுதார்

## திருப்புகழ்

9. அருணகிரிநாதர்

நிறைமதி முகமெனும் ஒளியாலே
நெறிவிழி கணைபுரி நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிரு அடியினி அருள்வாயே
மறைபயி லரிதிரு மருகோனே
மருவலர் அசுரர்கள் குலகாலா
குறமகள் தனைமணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. திருஞானசம்பந்தர் பண் - காந்தாரம்

காயச்செல்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாய்ச் சூர் அன்றறுத்து மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே.

## திருக்குறுந்தொகை

2. திருநாவுக்கரசர்

சமர சூரபன் மாவைத் தடிந்தவேற
குமரன் தாதைநற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்கு அன்புடைத்தொண்டர்கள்
அமர லோகமது ஆளுடையார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சுந்தரமூர்த்திநாயனார் பண் - தக்கேசி

ஒட்டி ஆட்கொண்டு போய் ஒளித்திட்ட
உச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டியைப் பகலை இருள்தன்னை
பாவிப்பார் மனத்து ஊறுமனந்தேனை
கட்டியைக் கரும்பின் தெளி தன்னைக்
காதலாற் கடற் சூர் தடிந்திட
செட்டி யப்பனை பட்டனைச் செல்வ
ஆரூரானை மறக்கலு மாமே.

## திருவாசகம்

4. மாணிக்கவாசகர் குழைத்தபத்து

அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடைமை
எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே
கொண்டிலையே
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள்முக்கண்
எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்நானோ இதற்கு
நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

5. சேந்தனார் பண் பஞ்சமம்

தொடங்கினள் மடலென்று அணுமுடித் தொடங்கற்
புறவித ழாகிலு மருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன்
மறத்தொழில் வார்த்தையும் உடையன்
திடங்கொள் வைத்திகர்வாழ் திருவிடைக் கழியிற்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயநத்
ஆறுமுகத் தமுதினை மருண்டே.

## திருப்பல்லாண்டு

6. சேந்தனார் பண் - பஞ்சமம்

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
அண்டத்தொடுமிடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

7. சேக்கிழார் சுவாமிகள்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

8. கச்சியப்ப சுவாமிகள்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன் மயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறுமுகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமா மணியே போற்றி

# திருப்புகழ்

9. அருணகிரிநாதர்

எதிரிலாத பத்தி தனைமேவி
இனிய தாள் நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிரகாம வெற்பில் உறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுரவாணி உற்ற கழலோனே
வழுதி கூன் நிமிர்த்த பெருமாளே
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. திருஞானசம்பந்தர் பண் - காந்தாரம்

வள்ளிமுலை தோய் குமரன் தாதை வான்தோயும்
வெள்ளிமலை போல் விடையொ ன்றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீர் அரிசில் தென்பாற் சிறைவண்டு
புள்ளும் மலி பூம்பொய்கை சூழ்ந்த புத்தூரே.

2. திருநாவுக்கரசர். திருத்தாண்டகம்

கோழிக்கொடியோன் தாதை போலும்
கொம்பனாள் பாகம் குளிர்ந்தாள் போலும்
ஊழிமுதல்வரும் தாமே போலும்
உள்ளுவார் உள்ளத்தில் உள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகரும் தாமே போலும்
அடைந்தவர்கட்கு அன்பராய் நின்றார் போலும்
ஏழு பிறவிக்கும் தாமே போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சுந்தரமூர்த்தி நாயனார். பண் - தக்கேசி

வேந்தராய் உலகாண்டு அறம்புரிந்து
வீற்றிருந்த இவ்வுடலது தன்னைத்
தேய்ந்திறந்து வெந்துயர் உழந்திடும் இப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்தாளங் கையில் ஆட்டுகந்தானைப்
பரமனைக் கடற் சூர்தடிந்திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொழுந்தினைச் சென்றடைமனனே.

## திருவாசகம்

4. மாணிக்கவாசகர். திருச்சதகம்

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

5. கருவூர்த்தேவர். பண் - பஞ்சமம்

என்னையுன் பாத பங்கயம் பணிவித்து
என்பெலாம் உருக நீ எளிவந்து
உன்னையென்பால் வைத்து எங்கும் எஞ்ஞான்றும்
ஒழிவற நிறைந்த ஒண்சுடரே
முன்னையென் பர்சம் முழுவதும் அகல
முகத்தலை அகத்தமர்ந் தெனக்கே
கண்ணலும் பாலும் தேனும் ஆரமுதும்
கனியுமாய் இனிமையாயினையே

## திருப்பல்லாண்டு

6. சேந்தனார். பண் - பஞ்சமம்

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழவிடையார்க்கு வழி வழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

7. சேக்கிழார் சுவாமிகள்

ஆலமே அமுதமாக உண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டர்க்காய் காய்ந்தனைஅடியேற்கின்று
ஞாலம் நின் புகழேயாக வேண்டும் நான் மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயிற் சிவபெருமானே என்றார்

8. கச்சியப்ப சுவாமிகள்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி

# திருப்புகழ்

9. அருணகிரிநாதர்

இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி
இடர்கள்பட் டலையப் புகுதாதே
திருவருட் கருணைப் பிரபையாலே
திரமெனக் கதியைப் பெறுவேனோ
அரியயற்கு அறிதற்கு அரியோனே
அடியவர்க்கு எளி அற்புதநேயா
குருவெனச் சிவனுக்கு அருள்போதா
கொடுமுடிக் குமரப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்கிழமை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. திருஞானசம்பந்தர் பண் - கொல்லி

ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றி மால்
கூறினார் அமர்தருங் குமரவேள் தாதையர்
ஆறினார் பொய் அகத்தை உணர்வெய்தி மெய்
தேறினார் வழிபடும் தென்குடித் திட்டையே.

2. திருநாவுக்கரசர் திருநேரிசை

குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் தாதைஎன்றும்
நறவிள நறுமென் கூந்தல் நங்கையோர் பாகத்தானைப்
பிறவியை மாற்றுவானைப் பெருவேளூர் பேணினானை
உறவினால் வல்லனாகி உணருமாறு உணர்த்துவேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சுந்தரமூர்த்தி நாயனார் - பண் தக்காரம்

பொரும் பலமதுடை அசுரன் தாரகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினை முன் படைத்துகந்தபுனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக் காமன் உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதும் ஊர் வினவில்
இரும்புனல் வெண் திரைபெருகி ஏலம் இலவங்கம்
இருகரையும் பொருதலைக்கும்அரிசிலின் தென்கரைமேல்
கரும்புனைவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டும் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே.

## திருவாசகம்

4. மாணிக்கவாசகர். திருச்சதகம்

போற்றி ஓம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றி ஓம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றி ஓம் நமச்சிவாய புறம் எனைப் போக்கல்கண்டாய்
போற்றி ஓம் நமச்சிவாய சய சய போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

5. கருவூர்த்தேவர். பண் - புறநீர்மை

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற்கு என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார் துணையென்றால்
அஞ்சலென்று அருள் செய்வான் கோயில்
கைவரும் பழனம் குழைத்த செஞ்சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

## திருப்பல்லாண்டு

6. சேந்தனார் பண் - பஞ்சமம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர்
போயாலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக்குஅருள்
புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சேக்கிழார் சுவாமிகள்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

8. கச்சியப்ப சுவாமிகள்

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியாரெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அருணகிரிநாதர்


விலைக்கு மேனியில் அணிக்கோவை மேகலை
தரித்த ஆடையும் மணிப்பூணும் ஆகவே
மினுக்கு மாதர்கள் இடைக் காமமூழ்கியே மயலூறி
மிகுத்த காமியன் எனப்பாருளோரெதிர்
நகைக்கவே உடலெடுத்தே வியாகுல
வெறுப்பதாகியே உழைத்தே விடாய்படு கொடியேனைக்
கலக்கமாகவே மலக்கூடிலே மிகு
பிணிக்குளாகியே தவிக்காமலேயுனை
கவிக்குளாய் சொலிக்கடைத்தேறவேசெய்யும்ஒருவாழ்வே
கதிர்குநாயக உனைத்தேடியே புகழ்
உரைக்கு நாயெனை அருட்பார்வையாகவே
கழற்குனாகவே சிறப்பானதாயருள் தரவேணும்
மலைக்கு நாயக சிவகாமி நாயகர்
திருக்குமானே முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவையாள் மகிழ் தருவேளே
வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்திய மாமுனி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவுறு பொருட்கோலமாய்வரு முருகோனே
நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொணாமலை தலைத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பதியில் வருவோனே
நிகழ்த்சும் ஏழ்பவ கடற் சூறையாகவே
எடுத்த வேல்கொடு பொடித்துளதாயெறி
நினைத்த காரியத் அனுக்கூலமேபுரி பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org